1975 மார்ச் 15]

அரிசன மாணவர் விடுதிகள்.

*339 வினு : திரு. வ. முத்து.—மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்சங்கோடு வட்டம், மல்லசமுத்திரம், கோட்டப்பாளையம் ஆகிய இடங்களில் அரிசன, மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்.—(அ) சேலம் மாவட்டம் கோட்டப்பாளையத்திலிருக்கும் அரசினர் அரிசன மாணவர் விடுதிக்காக கட்டடம் கட்டும் செயற்குறிப்பேதும் அரசிடமில்லை. ஆயினும் மல்லசமுத்திரத்திலிருக்கும் அரசினர் அரிசன மாணவியர் விடுதிக்கும், மாணவர் விடுதிக்கும் கட்டடங்கள் கட்டுமாறு தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்துக்கு அரசு உத்திரவிட்டுள்ளது.

(இ) மல்ல சமுத்திரத்திலுள்ள விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணியைத் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் உரிய காலத்தில் மேற்கொள்ளும்.

*340 வினு : திரு. ஏ. எம் டி. நாச்சியப்பன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், ஆத்தூரில் உள்ள அரசு கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கென அங்கு ஒரு அரிசன மாணவர் இல்லம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:—(அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டம் ஆத்தூரில் 50 மாணவர்கள் தங்கிப் பயிலும் வசதியுடையதாய், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென அரசு விடுதியொன்று, தொடங்கும் செயற்குறிப்பு, அரிசன நல இயக்குநரிடமிருந்து வரப்பெற்றுள்ளது. 1974–75-ஆம் ஆண்டுக்கு 21 புதிய விடுதிகள் நிதிநிலைக்கேற்ப திறக்க அரசு முடிவு செய்து அதற்கான இடங்களையும் தேர்ந்தெடுத்து ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆகவே, மேற்படி கோரிக்கை இம்மாதிரி வரப்பெறும் இதர கோரிக்கைகளுடன் 1975–76-ம் ஆண்டில் இரண்டாம் நிலைத்-திட்டத்தின் கீழ் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

(முற்பகல் 9–30).

திரு. என். மருதாசலம்: அரிசன மாணவர்களுக்காக 21 புதிய விடுதிகள் திறப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். எந்தெந்த இடத்தில் திறக்கப் போகிறுர்கள்?